SHANKAR IAS ACADEMY™

THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

# தமிழகத் தலைவர்கள் வரிசை

(TNPSC தேர்வு Unit - 8 மற்றும் Unit - 9 உடன் தொடர்புடையது)



# கலைஞர் கருணாநிதி


SHANKAR IAS ACADEMY

AP-2241, 2nd Floor, 12th Main Road,

Anna Nagar, Chennai - 600 040. Tamil Nadu.

www.shankariasacademy.com

Email : tnpscfeedback@shankarias.in

# தமிழகத் தலைவர்கள் வரிசை

## 6. கலைஞர் கருணாநிதி

### இளம் பருவம்

- இவர் 1924 ஜூன் 3 இல் திருவாரூர் அருகே உள்ள திருக்குவளை என்னும் கிராமத்தில் பிறந்தார். இவரின் இயற் பெயர் **தட்சிணா மூர்த்தி**.
- பெற்றோர்: முத்துவேலர் – அஞ்சுகம் அம்மையார்.
- இவர் **தமிழ் மாணவர் மன்றம்** என்ற அமைப்பைத் துவக்கினார்.
- இவர் **"இளைஞர் மறுமலர்ச்சி அமைப்பு"** என்ற இயக்கத்தை தொடங்கினார்.
- இவர் துவக்கிய **மாணவ நேசன்** (1938) என்னும் கையெழுத்துப் பிரதி பத்திரிக்கை பின்னர் **முரசொலி** (1942) என ஆகியது.

### பொது வாழ்க்கை

- நீதிக்கட்சித் தலைவர் **அழகிரி சாமியால்** இவர் பொதுவாழ்க்கைக்கு வந்தார்.
- பெரியார் நடத்திய குடிஅரசு பத்திரிக்கையில் இவர் பணியாற்றினார்.
- இவரின் **தூக்கு மேடை** நாடகத்தைப் பார்த்த நடிகர் **M.R. ராதா** இவருக்கு **கலைஞர்** என்ற அடைமொழியை வழங்கினார். அதனைத் தொடர்ந்து இவர் **'கலைஞர்' கருணாநிதி** என அழைக்கப்பட்டார்.
- இவர் 1953 இல் கல்லக்குடி பெயர் மாற்றப் போராட்டத்திற்கு தலைமை ஏற்றார். இதனால் இவருக்கு 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.
  - 1969 இல் இவர் முதலமைச்சர் ஆனதும் இப்பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 1957 சட்டமன்றத் தேர்தலில் **குளித்தலை** தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் பின்னர் 2016 வரை தான் போட்டியிட்ட அனைத்து தேர்தலிலும் வென்றவர் ஆவார்.

SHANKAR IAS ACADEMY

## ஆட்சியமைத்தல் (முதல்முறை)

- 1967 இல் அண்ணாவின் அமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆக இருந்தார். 1969 இல் அண்ணாவின் மறைவுக்குப் பின்னர் 1969 பிப்ரவரி 10 இல் இவர் முதலமைச்சர் ஆனார். இவரின் பதவிக்காலம்:
  - 1969 முதல் 1971 வரை – 2 ஆண்டுகள்
  - 1971 முதல் 1976 வரை – 5 ஆண்டுகள்
  - 1989 முதல் 1991 வரை – 2 ஆண்டுகள்
  - 1996 முதல் 2001 வரை – 5 ஆண்டுகள்
  - 2006 முதல் 2011 வரை – 5 ஆண்டுகள்
- 1961 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு நில உச்சவரம்புச் சட்டத்தை திருத்தம் செய்து அதிகபட்ச ஏக்கர் 30 என்பதை ஏக்கர் 15 ஆக இவர் 1970 ஆம் ஆண்டு குறைத்தார்.
  - இதன்மூலம் கிடைத்த நிலங்கள் நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்டது.
- இவர் 1969 இல் **கிராம மின்மயமாக்கும் திட்டத்தை** கொண்டு வந்தார்.
- இவரின் ஆட்சியில் பஞ்சாலைப் பிரச்சனை பெரும் சவாலாக இருந்தது. அண்ணாவின் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட **பி.எஸ். லோகநாதன் நிபுணர் குழுவின்** பரிந்துரைகள் ஏற்கப்பட்டு பஞ்சாலைப் பிரச்சனை தீர நடவடிக்கை எடுக்கப்பட்டது.
  - மேலும் **தமிழக நெசவாலை தொழிற்கழகம்** உருவாக்கப்பட்டது.
- இவர் தலைமையிலான அரசு 1969 இல் மத்திய – மாநில உறவுகளை ஆய்வு செய்வதற்காக **P.V. இராஜமன்னார் ஆணையத்தை** (P.V. Rajamannar Commission) அமைத்தது.
  - இதன் உறுப்பினர்கள்:
    - ஏ. லட்சுமண சாமி முதலியார்
    - பி. சந்திரா ரெட்டி
  - இந்த ஆணையம் தனது அறிக்கையை மாநில அரசிடம் 1971 இல் அளித்தது.

SHANKAR IAS ACADEMY

- இவரின் ஆட்சியில் தமிழ்நாட்டின் **முதலாவது காவல்துறை ஆணையம்** (Police Commission) 1969 இல் அமைக்கப்பட்டது.
    - ஆணையத்தின் தலைவர் - **R.A. கோபால சாமி.**
- குடிசைகள் அற்ற தமிழகம் உருவாக வேண்டும் என்ற நோக்கில் 1970 இல் இவர் **தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை** தொடங்கினார்.
    - குடிசையில் வசித்தவர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டித்தருவது இதன் நோக்கமாகும்.
    - Tamilnadu Areas Improvement and Clearance Act, 1971 எனும் சட்டமானது மேற்கண்ட வாரியத்திற்கு சட்ட அங்கீகாரம் அளித்தது.
- **மனோன்மணியம் சுந்தரனார்** இயற்றிய **"நீராருங் கடலுடுத்த"** என்னும் பாடலை தமிழ்த்தாய் வாழ்த்தாக இவர் 1970 இல் கொண்டு வந்தார்.
- 1970 இல் பாரிசில் நடைபெற்ற மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டில் இவர் கலந்து கொண்டார்.
- 1970 இல் இவர் **உலக தமிழாராய்ச்சி நிறுவனத்தை** சென்னையில் அமைத்தார்.
- 1971 இல் இந்தியாவிலேயே **முதன்முறையாக** தமிழ்நாட்டில் **மாநிலத் திட்டக்குழு** (State Planning Commission) உருவாக்கப்பட்டது.
- 1971 இல் **தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்** (TIDCO) மற்றும் தமிழ்நாடு **தொழில் முன்னேற்ற நிறுவனம்** (SIPCOT) ஆகியவை இவர் ஆட்சியின் பொழுது கொண்டு வரப்பட்டது.
    - இது தொழில் முனைவோர்க்கு ஊக்கம் அளித்தது. இதனால் அதிகளவில் தொழிற்சாலைகள் உருவாயின.
- 1971 இல் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தை இவர் கொண்டு வந்தார்.
- 1971 இல் இவருக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் **கௌரவ டாக்டர் பட்டம்** வழங்கியது.
- தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் தென்பாண்டி சிங்கம் என்ற நூலை எழுதியதிற்காக இவருக்கு **ராஜராஜன் விருதை** அளித்தது.

SHANKAR IAS ACADEMY

## ஆட்சியமைத்தல் (இரண்டாவது முறை)

- இவரின் ஆட்சியில் 1971 இல் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டது.
  - அரசின் வருவாயை பெருக்கவும் கள்ளச் சந்தையில் மது விற்கப்படுவதை தடுக்கவும் இதனை செயல்படுத்தியதாக கூறப்பட்டது.
- இவர் 1972 இல் தஞ்சாவூரில் ராஜராஜ சோழனுக்கு சிலை அமைத்தார்.
- 1972 இல் தென்னிந்தியாவிலேயே முதன்முறையாக **கோவையில்** விவசாயப் பொறியியல் ஆராய்ச்சிக் கல்லூரியை இவர் தொடக்கி வைத்தார்.
- 1973 இல் கை ரிக்சா ஒழிக்கப்பட்டு **சைக்கிள் ரிக்சா** வழங்கும் திட்டத்தை இவர் நடைமுறைப்படுத்தினார்.
- 1973 ஆம் ஆண்டு இவர் தலைமையிலான அரசு திருநெல்வேலியில் **முப்பெரும் விழாவை** நடத்தியது.
  - **பாரதியின்** எட்டயபுரம் இல்லத்தை நினைவுக் கூடமாக்கியது.
  - வ.உ. **சிதம்பரனாருக்கு** சிலை வைத்தல்.
  - பாஞ்சாலங்குறிச்சியில் **கட்டபொம்மன்** கோட்டை திறப்பு விழா.
- **"தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்"** மூலமாக நேரடியாக விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்முதல் செய்யும் திட்டம் 1973 இல் இவரால் துவக்கி வைக்கப்பட்டது.
- இவரின் ஆட்சியில் **மகளிர் காவல்துறை பிரிவு** (Women Police Wing) ஆனது 1973இல் உருவாக்கப்பட்டது.
- 1974 இல் இந்தியாவிலேயே முதன்முதலாக **மாநில சுயாட்சி தீர்மானத்தை** (State Autonomy Resolution) இவர் தலைமையிலான அரசு தமிழக சட்ட சபையில் நிறைவேற்றியது.
- இவர் ஆட்சியின் பொழுது 1974 இல் **தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்** (TAHDCO) உருவாக்கப்பட்டது.
  - இது நிறுவனச் சட்டம் 1956 (Company's Act 1956)-இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

SHANKAR IAS ACADEMY

- இது பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினரின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதை நோக்கமாக கொண்டது ஆகும்.

➢ 1974 இல் இவர் **"செந்தமிழ் சொற் பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்"** என்பதை உருவாக்கினார்.

➢ இவர் ஆட்சியின் பொழுது **தகுதியுள்ள அனைத்து சாதியினரும் இந்து கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம்** என்ற சட்டம் 1970 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. ஆனால் நீதிமன்ற வழக்கு உட்பட சில காரணங்களால் இந்த **முற்போக்குச் சட்டம்** நடைமுறைப் படுத்தப்படவில்லை.

➢ 1976 ஜனவரி 31 இல் இவர் தலைமையிலான அரசு **சரத்து 356** யை பயன்படுத்தி கலைக்கப்பட்டு தமிழகத்தில் **குடியரசுத் தலைவர் ஆட்சி** (President's Rule) பிரகடனப்படுத்தப்பட்டது.

## ஆட்சியமைத்தல் (மூன்றாவது முறை)

➢ இவரின் ஆட்சியின் பொழுது 1989 இல் **தமிழ்நாடு வணிகர் நல வாரியம்** தொடங்கப்பட்டது.

➢ மூதாதையர்களின் சொத்தில் பெண் பிள்ளைகளுக்கு சமபங்கு வழங்கும் **இந்து வாரிசுரிமை (தமிழ்நாடு திருத்தம்) சட்டம், 1989** யை இவர் நடைமுறைப்படுத்தினார்.

- 1929 இல் **செங்கல்பட்டில்** நடந்த **முதலாவது சுயமரியாதை மாநாட்டில்** நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இச்சட்டம் இயற்றப்பட்டது.

➢ இவரின் ஆட்சியின் பொழுது 1989 இல் **தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்** நடைமுறைப்படுத்தப்பட்டது.

➢ இவரால் 1989 இல் தர்மபுரியில் **மகளிர் சுய உதவிக் குழு** தொடங்கப்பட்டது.

➢ இவரின் ஆட்சியின் பொழுது **இரண்டாவது காவல்துறை ஆணையம்** 1989 இல் **சபாநாயகம்** தலைமையில் அமைக்கப்பட்டது.

➢ 1989 இல் இவர் **சிறுபான்மையினர் நல ஆணையத்தை** உருவாக்கினார்.

SHANKAR IAS ACADEMY

- இவரின் ஆட்சியின் பொழுது **ஆசியாவின் முதல் கால்நடைப் பல்கலைக்கழகம்** (கால்நடை மற்றும் விலங்குகள் அறிவியல் பல்கலைக்கழகம்) ஆனது 1989 ஆம் ஆண்டு சென்னையில் ஏற்படுத்தப்பட்டது.
- **இந்தியாவிலேயே முதன்முறையாக** தமிழகத்தில் உள்ள விவசாயிகளுக்கு இவரின் ஆட்சியில் (1990) தான் **இலவச மின்சாரம்** வழங்கப்பட்டது.
- அரசுப் பணிகளில் **பெண்களுக்கு 30% இடஒதுக்கீட்டை** 1990 இல் இவர் கொண்டு வந்தார்.

## ஆட்சியமைத்தல் (நான்காவது முறை)

- **இந்தியாவிலேயே முதல் முறையாக** தமிழகத்தில் **உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களில்** (Local body elections) பெண்களுக்கு **33.3%** இடஒதுக்கீட்டை இவர் 1996 இல் கொண்டு வந்தார்.
- தமிழகத்தில் உள்ள மாவட்டங்கள் மற்றும் போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவை தலைவர்களின் பெயரால் அழைக்கப்பட்டு வந்தன. இது காலபோக்கில் சமூகத்தில் சாதி மோதல் போக்கை ஏற்படுத்தியது. இதனை தவிர்ப்பதற்காக தலைவர்களின் பெயரிலான மாவட்டங்கள் அவை சார்ந்த **மாவட்டத் தலைநகரின் பெயரிலும்** மற்றும் போக்குவரத்துக் கழகங்கள் அவை சார்ந்த **மண்டலத்தின் தலைமையகத்தின்** பெயரிலும் 1997இல் இவர் மாற்றம் செய்தார்.
- இவர் ஆட்சியின் பொழுது 1997 இல் அமைக்கப்பட்ட **கோலப்பன் குழுவின்** பரிந்துரையின் படி விவசாயத் தொழிலாளர்களின் கூலி உயர்த்தப்பட்டு நிர்ணயம் செய்யப்பட்டது.
  - குறைந்தபட்சம் கூலி நிர்ணயம்
  - மேலும் விவசாயத் தொழிலாளர்களின் வேலை நேரத்தை தீர்மானித்தது.
    - ஆண்கள் – 6 மணி நேரம்
    - பெண்கள் - 5 மணி நேரம்
- 1996 இல் **மெட்ராஸ்** (Madras) என்று **ஆங்கிலத்தில்** குறிப்பிடப்பட்டு வந்த பெயரை **சென்னை** (Chennai) என்று இவர் மாற்றினார்.

SHANKAR IAS ACADEMY

- 1996 இல் இவர் தமிழ் வளர்ச்சிக்கென்று தனியாக ஒரு அமைச்சகத்தை உருவாக்கினார்.
- 1997 இல் உயர்கல்விக்கு என தனியாக ஒரு துறையை இவர் தொடங்கினார்.
- 1997 இல் இந்தியாவிலேயே **முதலாவது சட்டப் பல்கலைக் கழகத்தை** அம்பேத்கர் பெயரில் சென்னையில் இவர் துவக்கினார்.
- இவர் 1997 இல் **"நமக்கு நாமே"** என்னும் திட்டத்தை தொடங்கி சுய உதவி குழுக்களை வலுப்படுத்தினார்.
- கலைஞர் கருணாநிதியின் ஆட்சியின் பொழுது **சாதி வேற்றுமை கலையவும், சமூக நீதிக் கொள்ளைக்கு புத்துயிர் தரவும், பெரியாரின் சமத்துவ சமுதாயக் குறிக்கோள்களைப் பரப்பவும்** ஒரு ஆக்கப்பூர்வமான **வீட்டு வசதித் திட்டமான** "சமத்துவபுரம்" என்னும் திட்டமானது உருவாக்கப்பட்டது.
    - இதன்படி ஒவ்வொரு வட்டத்தின் (தாலுக்கா) கிராமப்பகுதிகளில் 100 வீடுகளைக் கொண்ட சமத்துவபுரம் திட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்படி
    - ஆதி திராவிடர்கள் - 40 வீடுகள்

      மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 25 வீடுகள்

      பிற்படுத்தப்பட்டோர் - 25 வீடுகள்

      இதர வகுப்பினர் - 10 வீடுகள்

      மொத்தம் = 100 வீடுகள்
    - **முதல் சமத்துவபுரம்** ஆனது 1998 ஆகஸ்டு 17 இல் மதுரை மாவட்டம் **மேலக்கோட்டை** என்ற கிராமத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.
- 1998 இல் தகவல் தொழில் நுட்பத்திற்கென்று தனியாக ஒரு துறையை இவர் தொங்கினார்.
    - இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் **விரிவான தகவல் தொழில் நுட்பக் கொள்கையை** உருவாக்கி அறிவித்த **முதல் மாநிலம்** ஆகும்.
- 1999 இல் இவர் தமிழ் இணைய மாநாட்டை நடத்தினார்.
- இவர் ஆட்சியின் பொழுது 1999 இல் **உழவர் சந்தை திட்டம்** தொடங்கி வைக்கப்பட்டது.

SHANKAR IAS ACADEMY

- உழவர்கள் தங்களது விளை பொருளை இடைத்தரகர் இன்றி நுகர்வோர்களுக்கு நேரடியாக விற்பனை செய்யலாம்.
- முதல் உழவர் சந்தை **மதுரையில்** துவக்கப்பட்டது.
- இதில் உழவர்கள் சந்தைப் பகுதியில் உள்ள தங்களின் இடத்திற்கு (விற்பனையகம்) வாடகை அளிக்க வேண்டியதில்லை.
- **சண்டிகர்** பகுதியில் செயல்பட்ட **'அப்னே மண்டி'** என்னும் திட்டத்தை இது முன்மாதிரியாக கொண்டது.

➢ 1999 இல் **வாழ்வொளித் திட்டத்தை** இவர் அறிமுகப்படுத்தினார்.

- இது பள்ளி மாணவர்களின் சுகாதாரத்தை (Health) உறுதி செய்தது.

➢ 1999 டிசம்பர் 31 இல் இவர் **கன்னியாகுமரியில்** திருவள்ளுவர் சிலையை திறந்தார். (இது **இரண்டுநாள்** விழாவாக நடைபெற்றது)

- இதனை உருவாக்கியவர் கணபதி ஸ்தபதி.
- சிலையின் பீடம் 38 அடி
- சிலையின் உயரம் 95 அடி
- மொத்த உயரம் 133 அடி
- மொத்த எடை 7,000 டன்
- சிலையில் 133 குறட்பாக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

➢ இவர் 2000 ஆம் ஆண்டு சென்னையில் **TIDEL பூங்கா** அமைத்தார்.

- இதனை தொடக்கி வைத்தவர் அப்போதைய பிரதமர் **அடல் பிகாரி வாஜ்பாய்**.
- இது (TIDEL) தமிழக அரசின் இரு நிறுவனங்களின் இணைந்த உருவாக்கம் ஆகும்.
  - TIDCO (Tamil Nadu Industrial Development Corporation)
  - ELCOT (Electronics Corporation of Tamil Nadu)
  - TIDCO + ELCOT = TIDEL

SHANKAR IAS ACADEMY

- தமிழ் மொழியானது மத்திய அரசினால் செம்மொழி என 2004 அக்டோபர் 12 இல் அறிவிக்கப்பட்டது.
  - மத்திய அரசினால் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட **முதல்மொழி** தமிழ் ஆகும்.
  - இதற்காக **முன்முயற்சி செய்தவர்** கலைஞர் கருணாநிதி (மத்திய அரசில் மிக முக்கிய கூட்டணிக் கட்சியாக இவரின் கட்சி இருந்தது).
  - அப்பொழுது தமிழக முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா.

## ஆட்சியமைத்தல் (ஐந்தாவது முறை)

- 2006 இல் **அனைத்து சாதியினரும்** அர்ச்சகர் ஆகலாம் என்னும் சட்டத்தை இவர் கொண்டு வந்தார்.
  - இது குறித்த சட்ட வழிமுறைகளை ஆய்வு செய்ய **A.K. ராஜன் குழுவை** அமைத்தார்.
- 2006 செப்டம்பர் 15 (அண்ணா பிறந்த தினம்) இல் மக்களுக்கு **விலையில்லா வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி** வழங்கும் திட்டத்தை இவர் துவக்கி வைத்தார்.
- 2006 செப்டம்பர் 17 (பெரியார் பிறந்த தினம்) நிலமற்ற விவசாயத் தொழிலாளருக்கு தலா **2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டம்** இவரால் தொடங்கப்பட்டது.
- இவர் ஆட்சியின் பொழுது (2006 – 2011) **உலக வங்கியின்** உதவியுடன் தொடங்கப்பட்ட **IAMWARM திட்டம்** ஆனது தமிழக நதிகளின் வடிநிலப் பகுதிகளை (Sub - basin) மேம்படுத்தி நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தது.
  - IAMWARM - Irrigated Agriculture Modernization and Water Bodies Restoration and Management.
- இவர் 2006 டிசம்பர் 30 இல் **வரும் முன் காப்போம்** என்னும் திட்டத்தை தொடங்கினார்.
  - இது **இந்தியாவிலேயே முதன்முறையாக** அறிமுகப்படுத்தப்பட்ட மருத்துவ முன்னோடித் திட்டமாகும்.
  - இத்திட்டத்தின் படி மாவட்டங்களில் நடத்தப்படும் மருத்துவ முகாம்களில் மக்கள் இலவச பரிசோதனை செய்து கொண்டு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

SHANKAR IAS ACADEMY

- இவர் 2006 இல் **“அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்”** என்னும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.
  - தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம பஞ்சாயத்துகளிலும் உள்கட்டுமான வசதிகளை விரிவுப்படுத்தி கிராமங்களை மேம்படுத்துவதாகும்.
- தமிழ் திரைப்படங்களுக்கு தமிழ் மொழியில் பெயர் வைத்தால் **கேளிக்கை வரி** (Entertainment Tax) விலக்கு அளிக்கப்படும் என்னும் சட்டத்தை 2006 இல் இவர் கொண்டு வந்தார்.
- 2006 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்புகளில் சேர்வதற்கு **பொது நுழைவுத் தேர்வு** இருந்து வந்தது. இது கிராமப்புற மாணவர்கள் உயர்கல்வி கற்பதற்கு பெரும் தடையாக இருப்பதை உணர்ந்த இவர் தலைமையிலான அரசு பொது நுழைவுத் தேர்வை இரத்து செய்தது. இது 2007 முதல் நடைமுறைக்கு வந்தது.
  - நுழைவுத் தேர்வு நீக்கம் தொடர்பாக ஆய்வு செய்ய **அனந்த கிருஷ்ணன்** தலைமையிலான **வல்லுநர் குழுவை** இவர் நியமித்தார்.
- தமிழகப் பள்ளிகளில் தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கட்டாயம் கற்பிக்க வேண்டும் என்னும் சட்டத்தை 2006 இல் இவர் இயற்றினார்.
- இவர் ஆட்சியின் பொழுது **மூன்றாவது காவல்துறை ஆணையம்** 2006 இல் **R. பூர்ணலிங்கம்** தலைமையில் அமைக்கப்பட்டது.
- மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக தமிழை அங்கீகரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை 2006 இல் தமிழக சட்டசபையில் இவர் நிறைவேற்றி மத்திய அரசிற்கு அனுப்பினார்.
- 2006 இல் இவர் **அறிவியல் தமிழ் மன்றத்தை** நிறுவினார்.
  - அறிவியல் தமிழை வளர்த்திட இது தொடங்கப்பட்டது.
- இவர் ஆட்சியின் பொழுது காமராசரின் பிறந்த நாளானது ஜூலை 15யை **கல்வி வளர்ச்சி தினமாக** கொண்டாடப்படும் என 2006-இல் அறிவிக்கப்பட்டது.
- இவர் முதலமைச்சராக இருந்த பொழுது மாநில அரசினால் தமிழகத்தில் 2007 ஜனவரி 1 இல் மதிப்புக் கூட்டு வரி (Value Added Tax - VAT) அறிமுகப்படுத்தப்பட்டது.

SHANKAR IAS ACADEMY

- இதன் மூலம் வருமான வரி கணிசமாக குறைந்துள்ளது.
- இது ஒரு மறைமுக வரி (Indirect Tax) ஆகும்.

➢ 2007 இல் இவர் கொண்டு வந்த தமிழ்நாடு குளம் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் சட்டம் மூலம் நீர்நிலைகள் பாதுகாக்கப்பட்டன.

➢ 2007 ஆம் ஆண்டு கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழில் **சிறந்த மென்பொருட்களை** (Software) உருவாக்குபவர்களுக்கு இனி ஆண்டு தோறும் **"கணியன் பூங்குன்றனார் பரிசு"** வழங்கப்படும் என அறிவித்தார்.

➢ 2009 இல் அனைத்து கல்லூரிகளிலும் விருப்பம் சார்ந்த தகுதிப் புள்ளி முறையை (Choice Based Credit System) இவர் அறிமுகப்படுத்தினார்.

- இதன் மூலம் பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்கள் தமிழை ஒரு பாடமாக படிக்கும் நிலை ஏற்பட்டது.

➢ இவரின் ஆட்சியில் 2009 இல் பொறியியல் படிப்பில் இயந்திரவியல் பிரிவுப் பாடங்கள் தமிழ் வழியில் கற்பிக்கும் முறை தொடங்கப்பட்டது.

➢ இவர் 2007 இல் **மாற்றுத் திறனாளி நலவாரியத்தை** அமைத்தார்.

➢ 2008 ஆம் ஆண்டு **மூன்றாம் பாலின நலவாரியத்தை** இவர் அமைத்தார்.

➢ இவர் ஆட்சியில் **உலகத் தமிழ் செம்மொழி மாநாடு** என்னும் நிகழ்வானது 2010 ஜூன் 23 - 27 தேதியில் **கோவை கொடிசியா வளாகத்தில்** நடத்தப்பட்டது.

➢ இவர் **சென்னை கோட்டூர்புரத்தில்** 2010 செப்டம்பர் 15 இல் (அண்ணா பிறந்த தினம்) அண்ணா நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைத்தார்.

- தெற்காசியாவிலேயே மிகப் பெரிய நூலகம்

➢ தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் 20% இடஒதுக்கீட்டை இவர் கொண்டு வந்தார்.

- இதற்கான அரசாணை 2010 செப்டம்பர் 30 இல் பிறப்பிக்கப்பட்டது.

➢ இவர் முதலமைச்சராக இருந்த பொழுது 2010 – 2011 கல்வி ஆண்டிலிருந்து தமிழகத்தில் சமச்சீர் கல்விமுறையானது நடைமுறைக்கு வந்தது.

SHANKAR IAS ACADEMY

- 2007 இல் இவரால் அமைக்கப்பட்ட **முத்துக்குமரன் குழுவின்** பரிந்துரையின் அடிப்படையில் **சமச்சீர் கல்வி முறை** அறிமுகப்படுத்தப்பட்டது.
- தமிழகத்தில் அதுவரை நான்கு விதமான கல்வி முறைகள் இருந்தன.
    - மாநிலக் கல்வி
    - மெட்ரிகுலேஷன் கல்வி
    - ஆங்கிலோ - இந்தியன் கல்வி
    - ஓரியண்டல் கல்வி.
- சமச்சீர் கல்வியானது மேற்கட்ட நான்கு கல்வி முறையையும் ஒன்றாக இணைத்து ஓரே பாடத்திட்டமாக **"சமச்சீர் கல்வி"** என்று மாற்றியது.

➢ இவரின் ஆட்சியின் பொழுது தமிழறிஞர்களின் படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. அவர்களுள் குறிப்பிடத்தகுந்தவர்கள்:

- தேவநேயப் பாவாணர்
- மறைமலை அடிகள்
- திரு.வி.க.
- கல்கி
- கவிமணி தேசிய விநாயகம்
- நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார்
- வ.உ. சிதம்பரனார்
- வ.வே.சு. அய்யர்
- கா. அப்பா துரையார்

➢ இவர் ஆட்சியின் பொழுது 2011 இல் பஞ்சமி நிலங்களை மீட்க **மருதமுத்து ஆணையம்** ஏற்படுத்தப்பட்டது.

SHANKAR IAS ACADEMY

- ஆங்கிலேய அரசு 1918 முதல் 1931 வரை பட்டியல் வகுப்பினருக்கு (Schedule Caste) இலவச நிலங்களை வழங்கியது. இது **பஞ்சமி நிலம்** ஆகும். இதனை இதே சமூகத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே விற்கவோ வாங்கவோ முடியும்.

➢ சமூக நலத் துறையில் முன்னோடியான திட்டங்களை இவர் நிறைவேற்றியதாலும் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்ததாலும் தமிழ்நாட்டின் வளர்ச்சி பல ஐரோப்பிய நாடுகளின் வளர்ச்சிக்கு சமமாக உருவாக இவரும் (கலைஞர் கருணாநிதி) ஒரு முக்கிய காரணம் என **அமர்த்தியா சென்** மற்றும் **ஜீன் த்ரெசும்** குறிப்பிட்டுள்ளனர்.

- அமர்த்தியா சென் (Amartya Sen) மற்றும் ஜீன் த்ரெசும் (Jean Draze) ஆகிய இருவரும் **An Uncertain Glory** என்னும் புகழ்பெற்ற புத்தகத்தை எழுதியவர்கள் ஆவர்.

➢ பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் மேம்பாட்டிற்காக **A.N. சட்டநாதன் ஆணையத்தை** இவர் 1969 இல் அமைத்தார். அதன் பரிந்துரையின் அடிப்படையில் 1971 ஆம் ஆண்டு 25% ஆக இருந்த பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினரின் இடஒதுக்கீட்டை 31% ஆக உயர்த்தினார்.

- பட்டியல் வகுப்பினரின் இடஒதுக்கீட்டை 16% இருந்து 18% ஆக உயர்த்தினார்.
- **உருது பேசும் இசுலாமியர்கள்** மற்றும் **கொங்கு வேளாளர்** சமூகத்தினரைப் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் இவர் சேர்த்தார்.
- 1987 ஆம் ஆண்டு 20% தனி இடஒதுக்கீடு கேட்டு உயிர்த்தியாகம் செய்து போராடிய **வன்னியர் சமூகத்தினரின்** கோரிக்கையின் நியாயங்களை உணர்ந்த இவர் தான் முதலமைச்சராக 1989 ஆம் ஆண்டு பதவியேற்றதும் வன்னியர் உட்பட **108 சமூகங்களை** பிற்படுத்தப்பட்டோர் (BC) பிரிவில் இருந்து தனியாக பிரித்து மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (MBC) என்ற பிரிவை உருவாக்கி அவர்களுக்கு **20% இடஒதுக்கீட்டை** அளித்து சமூக நீதியை நிலைநாட்டினார்.
- இவர் 2007 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோரின் 30% இடஒதுக்கீட்டில் இருந்து 3.5% பிரித்து **இசுலாமியர்களுக்கு தனி இடஒதுக்கீடு** அளித்தார்.
- இவர் 2009 ஆம் ஆண்டு பட்டியல் வகுப்பினரின் 18% இடஒதுக்கீட்டில் சமூக ஒடுக்குமுறையால் அதிகம் பாதிக்கப்பட்ட **அருந்ததியினர் பிரிவினருக்கு 3% உள் ஒதுக்கீடு** (Sub - quotas) கிடைக்க இவர் வழிவகை செய்தார்.

SHANKAR IAS ACADEMY

➢ இவர் கதைகளாவும், கவிதையாகவும், புதினமாகவும் பல நூல்களை எழுதியுள்ளார். அதில் குறிப்பிடத்தகுந்தவை:

- நெஞ்சுக்கு நீதி (தன் வரலாறு)
- குறளோவியம் (திருக்குறள் உரை)

➢ கலைஞர் கருணாநிதி அவர்கள் 2018 ஆகஸ்ட் 7 இல் இயற்கை எய்தினார்.

* * * * * * * *

SHANKAR IAS ACADEMY